**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.65/2021**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : குருநாதன் | மதம் | : இந்து |
| த/பெ | : சங்கர ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 67 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : வங்கி பணி (ஓய்வு) | வட்டம் | : திருத்தணி |

**27.11.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என் அப்பா பெயர் என்ன என்றால் சங்கர ரெட்டியார் ஆகும். என் அப்பாவிற்கு எத்தனை வாரிசுகள் என்றால் 1. நாராயணசாமி, 2. அன்பழகன், 3. பாலசுப்பிரமணியம், 4. விநாயகம், 5. வேலு, 6. நான், 7. துர்கா ஆகிய 7 மக்கள் ஆவார்கள். இதில் நாராயணசாமி மட்டும் இறந்துவிட்டார். என் அப்பா மேற்படி 7 பேருக்கும் உயில் எழுதி வைத்துள்ளாரா என்றால் இல்லை. ஆண் மக்கள் 6 பேருக்கு மட்டும் எழுதி வைத்துள்ளார். 6 பேருக்கும் எந்த எந்த சொத்தை உயில் எழுதி வைத்துள்ளார் என்பதை சொல்ல முடியுமா என்றால் எனக்குரியது மட்டும் சொல்ல முடியும். மற்றவர்களுக்குரியது சொல்ல முடியாது. சொத்து என் அப்பாவிற்கு எப்படி வந்தது என்றால் பூர்வீக சொத்தாகும்.

2. வழக்கு சொத்து என் அப்பாவிற்கு முன்பு யார் பெயரில் இருந்தது என்றால் என் தாத்தா குள்ளப்ப ரெட்டியார் பெயரில் இருந்தது. என் தாத்தா குள்ளப்ப ரெட்டி பெயரில் உள்ள ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சொத்து என் அப்பாவிற்கு எப்படி வந்தது என்றால் பூர்வீக சொத்தாகும். என் அப்பா பெயரில் இருந்த புல எண் சொல்ல முடியுமா என்றால் புல எண்.123/155 ஆகும். அதைதான் எனக்கும் எழுதி கொடுத்துள்ளார். புல எண்.123/155க்கான வருவாய் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் பட்டா இல்லை, சிட்டா ஆகியவை எடுக்கவில்லை. தேவைப்படாததால் அதை எடுக்கவில்லை.

3. புல எண்.123/155க்கான பத்திரங்கள் எதுவும் என் அப்பா பெயரில் இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. உயில் பற்றி மட்டும்தான் தெரியும். என் அப்பா எப்போது உயில் எழுதினார் என்றால் மார்ச் மாதம் 1993ல் எழுதினார். தேதி எனக்கு தெரியவில்லை. பூர்வீக சொத்து என்றால் வருவாய் ஆவணங்களான பட்டா, சிட்டா ஆகியவை என் அப்பா, என் தாத்தா பெயரில் உள்ளதா என்றால் நான் இதுவரை பார்க்கவில்லை. தேடி பார்க்க வேண்டும். A அட்டவணை சொத்து வீடு எந்த வருடம் கட்டப்பட்டது என்றால் 1967ல் என் அப்பா கட்டிய வீடாகும். 1967ல் இருந்து என் அப்பா அனுபவித்து வந்த வருவாய் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தேடி பார்க்க வேண்டும்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)